பாடம் 1

# வான்முட்டும் கோபுரம்

*மிகவும் உயரமான கட்டடங்களைக் கட்டுகிறபோது உச்சியில் இருந்து வேலை செய்வோரை நீ பார்த்திருக்கிறாயா? வெகுகாலத்திற்கு முன்னே சிலர் வானத்தைத் தொடும் அளவிற்கு உயரமான கோபுரம் ஒன்றைக் கட்ட முயற்சித்தனர். தேவனின் திட்டமோ அதுவல்ல. தேவனுடைய சித்தத் திற்கு மாறான அது, பாபிலோனின் திட்டம்.*

ஆரம்பத்தில் உலகத்தில் இருந்த மக்கள் அனைவரும் ஒரே மொழியைப் பேசினார் கள். பொருட்கள், இடங்கள் என யாவையும் ஒரேவிதமாகத் தான் பெயர் சொல்லி அழைத் தார்கள். ஒருவர் பேசுதை மற்றவரால் விளங்கமுடிந்தது.

வெள்ளப்பெருக்கிற்குப் பிறகு, உலகில் இருந்த மக்கள் அனைவரும் ஒன்றாக ஓரிடத் திலேயே கூட்டமாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் அநே



கர் தேவனை மறந்து வேறு பட்ட வாழ்க்கை வாழ்ந்தனர்.

தேவனைத் தொழுது பக்தியாய் வாழும் மக்களுடன் கலந்து உறவாடவோ, கூடி வாழவோ அந்தப் பக்தியற்ற மனிதர்கட்கு பிடிக்கவில்லை. ஆதலால் சிநெயார் எனும் மிக அழகான சமவெளியில் தங்கித் தங்கள் விருப்பம்போல் வாழ லாம் என்று தீர்மானித்தனர்.

சிநெயார் தேசத்துமக்கள் பிறரைக் காட்டிலும், ஏன் தேவ னைக் காட்டிலும் தங்களுக்கு எல்லாம் தெரியும், தாங்கள் எதுவும் செய்யமுடியும் என்கிற கெர்வத்தில் இருந்தார்கள்.

ஒருநாள் ஒருவனுக்கு ஒரு புதிய யோசனை உதித்தது. ‘‘நாம் நமக்கென்றே ஒரு புதிய நகரம் ஒன்றுகட்டினால் நன்றாக இருக்குமே’’என்றான். அனை வரும் மகிழ்ச்சியுடன் ஒத்துக் கொண்டனர்.

‘‘நாம் செங்கல் அறுத்து, அதை நன்றாய்ச் சுடுவோம்; செங்கல்லையும் நிலக்கீலையும் வைத்து கட்டட வேலையை நன்றாகச் செய்வோம்’’ என்று பேசிக்கொண்டனர். சிநெயார்

## மனன வசனம்

**தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன். அப்போஸ்தலர் 10:34,35.**

சமவெளியில் கல்லுக்குப் பதிலாகச் செங்கல்லும் சாந்துக்குப் பதிலாக நிலக்கீலும்இருந்தது.

ஒருநாள் அவர்களில் மற்றொருவனுக்கு, வேறு ஓர் எண்ணம் மனதில் உதித்தது. அவன் சிலரிடம் அதைச் சொல்லிய போது, அனைவருக்கும் அந்த யோசனை பிடித்திருந்தது.

எனவே அவர்கள் மற்றவர்களிடம், ‘‘நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாத படிக்கு ஒரு நகரத்தைக் கட்டுவோம்; வானத்தைத் தொடும் அளவில் உயரமான கோபுரம் ஒன்றையும் கட்டுவோம்; அப்படியானால், நாம் பிரிந்து விடாமல் ஒரே கூட்டமாக ஒன்றாகவே வாழமுடியும்; அருமையாகக் கட்டி நன்றாக வாழுவோம். நம்மைப் பார்க்கவும் நம்முடைய இந்தக் கோபுரத்தின் சிறப்பைப் பார்க்கவும் அந்தப் பக்திமான்கள் வருவார்கள். நமது கைத்திறனையும், நாம் நம்முடைய மூளையைப் பயன்படுத்திச் செய்திருக்கும் செயல்களையும் கண்டு அப்படியே ஆச்சரியப்பட்டுப் போவார்கள் என்றெல்லாம் பேசிக்கொண்டார்கள்.

கட்டடம் கட்டுவதற்கும் கோபுரம் கட்டுவதற்கும் தேவையான பொருட்களைச் சேகரிக்கத் தொடங்கினர். சிலர் மண்ணைக் குழைத்து செங்கல் வடிவத்தில் அதை அமைத்து வைக்கோலால் நன்றாகச் சுட்டனர். சிலர் நிலக்கீலைச் சேகரித்தனர். மிகவும் உற்சாகமாக ஒற்றுமையாக, வேகவேகமாக வேலைசெய்தனர்.

ஒருவன் செங்கல்லை எடுத்து மற்றவனிடம் கொடுக்க, அவன் அடுத்தவனிடம் கொடுக்க கடைசியாகச் செங்கல் மிகவும் உயரமான



# செய்தி

**நம்மைப் போன்று இல்லாமல், வித்தியாசமாக இருப்பவர்களுக்கு உதவும்போது நாம் தேவனுக்குச் சேவைசெய்கிறோம்.**

இடத்தில் வேலை செய்து கொண்டு இருப்பவனிடம் போய்ச் சேர வேகமாகக் கோபுரம்உயர்ந்தது.

தங்களுக்குப் பேர் உண்டாகும்படிக்குச் செயல்படும் பக்தியற்ற மனிதர்களின் வேலையைத் தேவன் பார்த்தார். அந்த மனிதர்களுக்குப் பாடம் ஒன்றைக் கற்றுக் கொடுக்க விரும்பினார். அவர்களது மொழியில் குழப்பத்தை உண்டாக்கினார். எனவே, ஒருவர் பேச்சு ஒருவருக்கு விளங்கவில்லை.

மேலிருப்பவன் செங்கல்லைக் கேட்டால், கீழிருந்து நிலக்கீல் வந்தது; பேச்சு விளங்காததால், வேலை நின்றுவிட்டது.

பூமியில் பல இடங்கட்குப் பிரிந்துசென்றனர். கர்த்தருக்குப் பிரியமாகச் சிலரும், பாவிகள் எனப் பலரும் வாழ்ந்தனர்.

என் செல்லமே நீ தேவனுக்காகவே வாழ்வாயா?

## புதிர் 1

**செய்முறை:** *படத்தில் காணும் புள்ளிகளை இணைத்துக்கொள்; பின்னர் படத்தில் கொடுக்கப்பட்டுள்ளது போன்று ஒரு படம் வரைந்துகொள். ஒவ்வொரு கோட்டிலுமிருந்து பொருத்தமற்ற வார்த்தையை வெட்டிவிடு. அப்படியானால் தேவனைப் பற்றிய மேலான ஓர் உண்மை அங்கே தெரியவரும். அதை நீ வரைந்துள்ள படத்தின் கோடுகளில் எழுது.*

